# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகம்

**பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தைத் தாபிப்பதற்காகவும்; பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரின் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் 2023, மே மாதம் 23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, மே மாதம் 02 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *179 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 60.00**　　**தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகம்

*ச. வ.- ஓ. 2/2023*

**பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தைத் தாபிப்பதற்காகவும்; பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரின் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*முன்னுரை*

*அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் கீழ் பகிரங்க நிதி மீதான முழுக்கட்டுப்பாட்டுடனும் மற்றும் குறிப்பாக வரவு செலவுத்திட்டக் குறிக்கோள்களை எய்துவதற்கான தேசிய வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற் கும், கண்காணிப்பதற்கும் பாராளுமன்றம் உரித்தாக்கப்பட்டு இருந்துள்ளதாதலாலும்:*

*அத்துடன், நிலைபெறுதகுதன்மையினதான நிதிசார் நிலைமை யினைப் பேணுவதற்கும் பகிரங்க வளங்களை பயனுள்ள வகையில் ஒதுக்குவதற்கும் மற்றும் பொதுப்பண்டங்கள் மற்றும் சேவைகளின் வினைத்திறனான விநியோகத்தை உறுதிசெய்வதற்கும் ஆன பொறுப்பான முடிவுகளை ஆக்குவது பாராளுமன்றத்திற்கு இன்றியமையாததாகக் கருதப்படுகின்றதாதலாலும்;*

*அத்துடன், பாராளுமன்ற நிதிசார் வெளிப்படையான தன்மைக்கான பரந்த அர்ப்பணிப்பின் பாகமாக, கொள்கை உருவாக்கும் செயல்முறைக் காக பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் முன்மொழிவுகள் பயனுள்ள முடிபுகளை எடுப்பதற்கான இயைபான தகவல்களை உள்ளடக்குதல் வேண்டும் என ஒப்புக் கொள்ளப்படுகின்றதாதலாலும்;*

*அத்துடன், பாராளுமன்றத்தின் கலந்தாராய்வுகள் மற்றும் அதனது பகிரங்க நிதிப்பொறுப்புக்களின் பயனுள்ள பிரயோகம், என்பன அது மீளாய்வுசெய்கின்ற முன்மொழிவுகளின் சுயாதீன பகுப்பாய்விற்கான அணுகுகைமூலம் உதவப்படுகின்றதென ஏற்றங்கீகரிக்கப்படுகின்றதாதலாலும்:*

அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் அல்லது சுயேட்சைக் குழுக்களின் விஞ்ஞாபனத்திலுள்ள கொள்கைகள் தொடர்பான சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற கிரயவியல் பகுப்பாய்வை வழங்குதல் அதிக வெளிப்படைத் தன்மைக்கும் தாங்கத்தகு பகிரங்க கொள்கைக்கும் இட்டுச்செல்ல முடியும் என ஏற்றங்கீகரிக்கப்படுகின்றதாதலாலும்:

அத்துடன் செலவிடும் முன்மொழிவுகளை நுணித்தாராய்கின்ற போதும் பகிரங்க நிதி முடிபுகளை ஆக்குகின்றபோதும் அதற்கு நம்பகமாகவுள்ள வரவுசெலவுத் திட்டப் பகுப்பாய்வுகளையும் கிரயவியலையும் பாராளுமன்றத்திற்கு வழங்குவதற்கும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் விஞ்ஞாபனங்களிலுள்ள முன்மொழிவுகள் பற்றிய கிரயவியல் பகுப்பாய்வை அவ் அரசியல்கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களுக்கு வழங்குவதற்கும் சுயாதீன நிறுவனம் ஒன்றைத் தாபிப்பது அவசியமாகவிருக்கின்றதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பாகம் I

## பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தை தாபித்தலும் அதனது பங்களிப்பும்

பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தைத் தாபித்தல்

**2.** (1) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகம் என அழைக்கப்படும் சுயாதீன உருவகம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகமானது –

(அ) இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும்;

(ஆ) பொது இலச்சினை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) அத்தகைய பெயரைக்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் அல்லது அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்; அத்துடன்

(ஈ) ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை வைத்திருக்கலாம், கொள்ளலாம் மற்றும் கையுதிர்க்கலாம்.

(3) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகமானது சுயாதீன குழுவொன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பாராளுமன்றத்திற்கு வகை கூறவேண்டியதாகவும் இருத்தல் வேண்டும்.

(4) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் சுதந்திரத்திற்கு எல்லா நேரங்களிலும் மதிப்பளிக்கப்படுதல் வேண்டும்.

(5) ஆளெவரும் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் தொழிற்பாடு மற்றும் நிருவாகத்தின்மீது தகாத செல்வாக்கை செலுத்துதலாகாது அல்லது அவற்றில் தலையிடுதலாகாது.

பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் குறிக்கோள்கள்

**3.** பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் குறிக்கோள்களானவை, வரவுசெலவுத்திட்டம் தொடர்பாக சுயாதீன, பாரபட்சமற்ற பகுப்பாய்வை, நடுத்தரகால பொருளாதார மற்றும் நிதிசார் நோக்கை அத்துடன் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக கொள்கை முன்மொழிவுகளின் நிதிசார், அரசிறை மற்றும் செலவின முன்நோக்கு ஒன்றிலிருந்தான செலவுத் தாக்கங்களை வழங்குவதனூடாக பின்வருவனவற்றுக்கு உதவுவதாதல் வேண்டும்:-

(அ) பாராளுமன்றம், அரசியலமைப்பின்கீழ் அதனது பகிரங்க நிதிப் பொறுப்புக்களை புரிவதிலும்; அத்துடன்

(ஆ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கும் அல்லது ஏதேனும் சுயேட்சைக் குழுவிற்கும்.

குறிக்கோள்களை நடைமுறைப் படுத்து வதற்கான உதவி

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகமானது, பின்வருவனவற்றுக்கு பகுப்பாய்வு சார் உதவியை வழங்குதல் வேண்டும்:-

(அ) வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள், பொருளாதார மற்றும் நிதிசார் எதிர்வுகூறல்கள் மற்றும் முன்னிறுத்தல் கள், அத்துடன் முன்மொழியப்பட்ட கொள்கைகள் மற்றும் சட்டமூலங்கள் பற்றிய கிரயவியல் உட்பட பகிரங்க நிதி தொடர்பான விடயங்கள் மீது ஏதேனும் குழுவிற்கு அல்லது பாராளுமன்ற உறுப்பினருக்கும்;

(ஆ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது ஒரு சுயேட்சைக்குழு தேர்தலுக்கு உடன் முன்னையகாலப் பகுதியில் அதனது விஞ்ஞாபனத்திலுள்ள ஏதேனும் முன்மொழிவுக்கு செலவு செய்வதற்கும்;

(இ) பாராளுமன்றம், பொதுவாக, பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகத்தின் குறிக்கோள்களுக்கு அவசியமான அல்லது உகந்ததான விடயங்கள்மீது பகுப்பாய்வுகள் மற்றும் விளக்கங்களை வழங்குவதன் மூலமும்.

பாகம் II

**பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர், பிரதி பாராளு மன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர், மதியுரைக்குழு மற்றும் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் பணியாட் டொகுதியினர் ஆகியோரை நியமித்தல்**

பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரை நியமித்தல்

**5**. இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர்

பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும்.

*பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரின் பதவிக்கு விண்ணப்பிப் பதற்கான தகவுடைமை கட்டளைகற்கள்*

**6**. பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரின் பதவிக்கு விண்ணப்பிக்கின்ற ஆளொருவர்–

(அ) தகுதிவாய்ந்தவராகவும், நாணயமானவராகவும், உயர் ஒழுக்க நேர்மையுடையவராகவும் மற்றும் சிறந்த நற்பண்பு உடையவராகவும் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அரசாங்க வரவுசெலவுத் திட்டமிடல், நிதிக்கொள்கை, நிதிசார் கொள்கை அல்லது பேரினப் பொருளாதாரப் பகுப்பாய்வு என்பவற்றில் ஆகக்குறைந்தது பதினைந்து வருட அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரின் பதவிக்காலம்*

**7**. பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரின் பதவிக்கால மானது அத்தகைய பதவிக்கான அவரது நியமனத் தேதியிலிருந்து ஐந்து வருடங்களாதல் வேண்டும்.

*பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரினது மீள் நியமத்திற்கான தகவுடைமை*

**8**. (1) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலராக நியமிக்கப்படும் ஆள் அரசியலமைப்புப் பேரவைக்கான பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் விதப்புரைமீது, இப்பாகத்தின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, மேற்கொண்டு ஒருகாலப்பகுதிக்கு மேற்படாமல் மீள்நியமனத்திற்காக கவனத்திற் கொள்ளப்படுவதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மீள்நியமனம் ஒன்று, அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் செய்யப்படுதல் வேண்டும்.

*பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரை நியமித்தல்*

**9**. இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர், அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் அவரது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதிலும்,

புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலருக்கு உதவுதல் வேண்டும்.

*பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரின் பதவிக்கு விண்ணப்பிப் பதற்கான தகவுடைமைக் கட்டளைக்கற்கள்*

**10**. பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரின் பதவிக்கு விண்ணப்பிக்கின்ற ஆளொருவர் -

(அ) தகுதிவாய்ந்தவராகவும், நாணயமானவராகவும், உயர் ஒழுக்க நேர்மையுடையவராகவும் மற்றும் சிறந்த நற்பண்பு உடையவராகவும் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அரசாங்க வரவுசெலவுத் திட்டமிடல், நிதிக்கொள்கை, நிதிசார் கொள்கை அல்லது பேரினப் பொருளாதாரப் பகுப்பாய்வு என்பவற்றில் ஆகக்குறைந்தது பத்து வருட அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரின் பதவிக்காலம்*

**11**. பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரின் பதவிக்காலம் அத்தகைய பதவிக்கான நியமனத் தேதியிலிருந்து ஐந்து வருடங்களாதல் வேண்டும்.

*பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரது மீள்நியமனத்திற் கான தகவுடைமை*

**12**. (1) பிரதி பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலராக நியமிக்கப்படும் ஆள் அரசியலமைப்புப் பேரவைக்கான பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் விதப்புரைமீது இப்பாகத்தின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலராக மேற்கொண்டு ஒரு காலப்பகுதிக்கு மேற்படாமல் மீள்நியமனத்திற்காக கவனத்திற் கொள்ளப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மீள் நியமனம் ஒன்று, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரைமீது சனாதிபதியினால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரின் நியமனம் அல்லது மீள்நியமனம் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலராக நியமிக்கப்படுவதற்கு அவரது/அவளது தகவுடைமை மீது தொடர்பு ஒன்றைக் கொண்டிருத்தலாகாது.

ஓய்வூதியம் அற்றது

**13.** பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரினது பதவி மற்றும் பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரினது பதவி என்பன ஓய்வூதியம் அற்றதாக இருத்தல் வேண்டும்.

பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் மற்றும் பிரதிப் பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலர் என்போரைத் தெரிவுசெய்தல்

**14.** (1) பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஆனவர் பின்வருவன வற்றில் அறிவித்தல் ஒன்றை வெளியிடுவதன் மூலம் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் பதவி மற்றும் பிரதி பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலர் பதவி ஆகிய பதவிக்கு விண்ணப் பங்களைக் கோருதல் வேண்டும்:-

(அ) வர்த்தமானியில்;

(ஆ) இலங்கையில் வெளியிடப்பட்டு புழக்கத்திலுள்ளதான சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலப் புதினப் பத்திரிகை ஒன்றில்; அத்துடன்

(இ) பாராளுமன்ற உத்தியோகபூர்வ இணையதளத்தில்;

(2) பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அழைப்பிதழ் மற்றும் அறிவித்தலைத் தயாரிக்கும்போது 15 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மதியுரைக்குழுவைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தலானது பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய விண்ணப்பங்களுக்காக ஆகக்குறைந்தது முப்பது நாட்காலப்பகுதி ஒன்றைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) (அ) பாராளுமன்ற செயலாளர் நாயகம் விண்ணப்பித்துள்ள ஆளின் பால், பின்னணியின் பல்வகைமை, அனுபவம் மற்றும் நிபுணத்துவம் என்பவற்றை உரிய கவனத்திற்கொண்டு, பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலராகவும், பிரதிப்

பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலராகவும் நியமிக்கப்பட வேண்டிய ஆட்களின் விதந்துரைக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் ஒன்றை அரசியலமைப்புப் பேரவைக்கு அனுப்புதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய பெயர் பட்டியலைப் பெற்றுக்கொண்டதன் மேல், அரசியலமைப்புப் பேரவையானது அதன் விதப்புரையை சனாதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன் சனாதிபதியினால் அல்லது விதந்துரைக்கப்பட்ட ஆட்களை பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் பதவிக்கும் மற்றும் பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் பதவிக்கும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(5) அரசியலமைப்புப் பேரவையானது, (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட பெயர்ப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆளை சனாதிபதிக்கு விதந்துரைக்காதவிடத்து, பாராளுமன்ற செயலாளர் நாயகம் -

(அ) பிரிவுகள் 6, 10 மற்றும் 16 இற்கமைய, பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலருக்கான பதவி அல்லது பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலருக்கான பதவி இப்பிரிவின்கீழ் விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள ஆட்களிடையே இருந்து அரசியலமைப்பு பேரவைக்கு வேறொரு பெயர் பட்டியலை அனுப்புதல் வேண்டும்; அல்லது

(ஆ) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் பகுதிக்கு அல்லது பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் பதவிக்கு விண்ணப்பித்துள்ள எவரேனும் ஆள் தேவைப்படும் தகைமைகளைக் கொண்டிருப்பின் இப்பிரிவின்கீழ் புதிய விண்ணப்பங்களைக் கோருதல் வேண்டும்.

*மதியுரைக் குழு*

**15**. பின்வருவோருக்கு உதவுவதற்கு பகிரங்க நிதி மீதான குழுவின் தவிசாளரையும், வழிகளும் வழிவகைகளும் பற்றிய குழுவின் தவிசாளரையும் மற்றும் பாராளுமன்ற பிரதிச் சபாநாயகரையும் கொண்டுள்ள மதியுரைக் குழுவொன்றிருத்தல் வேண்டும் -

(அ) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவரின் மற்றும் பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரின் தெரிவுச் செயல்முறையில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஒவ்வொரு நிதியாண்டுக்கும் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்திற்கான நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிப்பதில் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலருக்கும்.

*நியமிக்கப் படுவதி லிருந்தான அல்லது பதிவியில் தொடர்ந்திருப்ப திலிருந்தான தகைமையீனம்*

**16**. ஆளொருவர், பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் பதவியில் அல்லது பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் பதவியில் நியமிக்கப்படுவதற்கு அல்லது பதவியில் தொடர்ந்திருப்பதற்கு பின்வரும் சந்தர்ப்பங்கள் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) அவர், அவரது நியமனத்தேதியன்று அல்லது அவரது பதவிக் காலத்தின்போது உள்ளபடியான, இயல்திற, நிகழ்தகவு, அக்கறை முரண்பாட்டைக் கொண்டிருப்பின் அக்கறை முரண்பாடானது பின்வருமாறு ஊகிக்கப்படுதல் வேண்டும் -

(i) அவர் பாராளுமன்றத்தின், மாகாண சபையின் அல்லது உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது வரின்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் அல்லது தொழிற்சங்கமொன்றின் உறுப்பினராக அரசியல் பதவி ஒன்றை வைத்திருப்பின் அல்லது ஏற்றுக்கொண்டிருப்பின்;

(iii) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலத்தினால் அல்லது அதன்சார்பில் செய்துகொள்ளப் பட்ட ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் எவையேனும் உரிமைகளை அல்லது நன்மைகளை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வைத்திருப்பின் அல்லது அனுபவித்திருப்பின்; அல்லது

(iv) அவரது கடமைகளை நிறைவேற்றுவதில் பங்கம் விளைவிக்கக்கூடிய சாத்தியம் இருக்கின்றதான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறைகளைக் கொண்டிருப்பின்;

(ஆ) இலங்கைப்பிரசையாக இராதிருப்பின் அல்லது இல்லாதொழியின்;

(இ) சுகவீனம் காரணமாக, உடல் அல்லது உளநலம் இல்லாமை காரணமாக அல்லது அத்தகைய வேறு காரணம் காரணமாக அவரது கடமைகளை நிறைவேற்றுவதில் நிரந்தரமாக இயலாதவராகவரின்;

(ஈ) மோசடியான அல்லது ஊழல் பண்பைக்கொண்டிருக்கின்ற அல்லது பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட பதவியின் அக்கறைகளுக்கு பங்கம் விளைவிக்கின்ற தவறொன்றிற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(உ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனையை அனுபவித்திருப்பின்;

(ஊ) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு தவறியிருப்பின்; அல்லது

(எ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிமன்றம் ஒன்றினால் கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக அத்துடன் பொறுப்புவிடுவிக்கப் படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டிருப்பின்.

**17.** (1) பாராளுமன்ற செயலாளர் நாயகம், முறைப்பாடொன்றைப் பெற்றுக்கொண்டதன் மேல், பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலர் பதவிக்கு அல்லது பிரதிப் பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலர் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொருவர் அத்தகைய பதவிக்காலத்தின்போது தகைமையற்றவராக வந்துள்ளார் என நம்புவதற்கான காரணத்தை கொண்டுள்ளவிடத்து, பாராளுமன்ற செயலாளர் நாயகம் அத்தகைய முறைப்பாடு தொடர்பில் விசாரணை ஒன்றை நடாத்துவதற்கு பகிரங்க நிதிமீதான குழு எழுத்தில் வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்.

*தகைமையீனம் சார்த்தப்பட்டிருக்கும் போதான நடவடிக்கை முறை*

(2) பாராளுமன்ற செயலாளர் நாயகம், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வேண்டுகோளின் பிரதிகளை சனாதிபதிக்கும் அரசியலமைப்புப் பேரவைக்கும் அனுப்புதல் வேண்டும்.

(3) அத்தகைய பிரதிகளைப் பெற்றுக்கொண்டதன் மேல், சனாதிபதி அரசியலமைப்பு பேரவையின் விதப்புரைமீது, எந்த ஆளின் சார்த்தப்பட்ட தகைமையீனம் விசாரிக்கப்படவுள்ளதோ அந்த ஆளின் சேவைகளை அத்தகைய விசாரணையைத் தொடர்ந்து முடிபு ஒன்று எடுக்கப்படும்வரை சனாதிபதி உடனடியாக இடைநிறுத்துதல் வேண்டும்.

(4) பகிரங்க நிதி மீதான குழு, தகைமையீனத்துக்கான அடிப்படையைக் கண்டு அத்துடன் தகைமையீனத்தை விதந்துரைத்தால், பாராளுமன்ற செயலாளர் நாயகம் அதனை சனாதிபதிக்கும் மற்றும் அரசியலமைப்புப் பேரவைக்கும் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் சனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரை மீது அதற்கான காரணங்களைக் குறித்தளித்தபின்னர், பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் அல்லது பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரை அத்தகைய பதவியிலிருந்து அகற்றுதல் வேண்டும்.

(5) பகிரங்க நிதி மீதான குழு தகைமையீனத்துக்கான அடிப்படை எதுவும் இல்லை எனக் கண்டால், பாராளுமன்ற செயலாளர் நாயகம் அதனை சனாதிபதிக்கும் அரசியலமைப்புப்பேரவைக்கும் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் சனாதிபதி (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட இடைநிறுத்தத்தை இல்லாதாக்குதல் வேண்டும்.

பதவியிலிருந்து விலகுதல்

**18.** பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் அல்லது பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் ஏதேனும் காலத்தில் பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகலானது கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது தேதி குறித்துரைக்கப்படாதுவிடின் அத்தகைய கடிதம் சனாதிபதி யினால் பெறப்பட்ட தேதியன்று பயனுறுதல் வேண்டும்.

பதவிக்காலம் முடிவுறுதல் இறப்பு, பதவியிலிருந்து அகற்றுதல் அல்லது பதவி விலகல் மீதான வெற்றிட மொன்றை நிரப்புதல்

**19.** (1) இறப்பு, பதவியிலிருந்து அகற்றுதல், பதவி விலகல் காரணமாக அல்லது பதவிக்காலம் முடிவுறுவதன் மீது பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரால் அல்லது பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரால் ஏதேனும் பதவி வறிதாகும் பட்சத்தில், பாராளுமன்ற செயலாளர் நாயகம், 14 ஆம் பிரிவின் நியதிகளின்படி அந்தந்தப் பதவிகளுக்கு புதிய விண்ணப்பங்களைக் கோருதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினைப் பின்பற்றி நியமிக்கப்பட்ட ஆளொருவர் ஐந்து வருட காலப்பகுதி ஒன்றிற்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

தற்காலிகமாக இராதிருக் கின்றமை

**20.** (1) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக அவருடைய பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்ற விடத்து, பிரதி பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர், ஆனவர் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் அவருடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலுமாக இருக்கின்றவரை அவரது இடத்தில் செயலாற்றலாம்.

(2) பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக அவருடைய பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்ற விடத்து, பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர், அவருடைய

கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலுமாக இருக்கும்வரை 10 ஆம் மற்றும் 16 ஆம் பிரிவுகளைக் கவனத்திற்கொண்டு அவருடைய இடத்தில் செயலாற்றுவதற்கு ஆளொருவரை நியமிக்கலாம்.

ஊதியம்

**21.** பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரினதும் மற்றும் பிரதிப் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரினதும் சம்பளங்களும் மற்றும் வேறு ஊதியங்களும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய சம்பளங்கள் மற்றும் வேறு ஊதியங்கள் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர்களது பதவிக்காலத்தின் போது குறைக்கப்படுதலாகாது.

பாகம் III

## பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் தொழிற்பாடு

பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தை தொழிற்படுத்துவதற்கும் முகாமை செய்வதற்குமான தத்துவங்களும் கடமைகளும் மற்றும் பணிகளும்

**22.** பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் பின்வருவனவற்றுக்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) 45 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கு அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் நியமிப்பதற்கும்;

(ஆ) 45 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மற்றும் ஒழுக்காற்றை பிரயோகிப்பதற்கும், அவர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்கும்;

(இ) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் சம்பளங்களையும் மற்றும் வேறு ஊதியங்களையும் தீர்மானிப்பதற்கும்;

(ஈ) இச்சட்டத்தின் கீழ் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலக பொறுப்புக்களை புரிவதற்கு உதவுவதற்கென அரசாங்க வரவு செலவுத்திட்டமிடலில், நிதிக் கொள்கையில், நிதிசார் கொள்கையில் பேரினப்பொருளியல் பகுப்பாய்வில் அல்லது அத்தகைய வேறு இயைபான அனுபவத்துறையில் அறிவும், அனுபவமும் உடைய எவரேனும் ஆளிடமிருந்தான சேவைகளைப் பெறுவதற்கும்;

(உ) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் தொழிற்பாட்டில் உதவுவதற்கென அல்லது இச்சட்டத்தின் கீழ் அதனது பொறுப்புக்களை புரிவதற்கு பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்துக்கு உதவுவதற்கென எவரேனும் ஆளுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கும்;

(ஊ) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்திற்கான செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கும்;

(எ) பிரிவு 29 இன் கீழ் செய்யப்பட்ட வேண்டுகோள்கள் தொடர்பாக ஏதேனும் பகிரங்க நிறுவனத்தினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான அல்லது இலத்திரனியல் பதிவேடு, தரவுகள், பகுப்பாய்வு, மாதிரியாக்கம் அல்லது வேறு தகவல்களின் இணக்கமான வடிவங்களில் உரிய நேரத்தில் சோதிப்பதற்காகவும் மற்றும் எண்ணிமகைமாற்றத்திற்காகவும் அணுகுகைக்கு வேண்டுகோள் விடுப்பதற்கும் அத்துடன் ஒழுங்கேற்பாடுகளைச் செய்வதற்கும்;

(ஏ) வரவு செலவுத்திட்ட அடிப்படையிலான முறையியல் மற்றும் கருதுகோள்களுக்கும், பகிரங்க நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்தினால் பாராளுமன்றத்திற்கு இடப்படும் வேறு நிதிசார் முன்மொழிவுகள் என்பவற்றுக்கும் வேண்டுகோள் விடுப்பதற்கும்;

(ஐ) தோதாக இருக்கக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும் காலத்தின்போதும் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்திற்கு வரவுசெலவுத்திட்டமிடல் மற்றும்

கிரயவியல் தரவின் தன்னியக்க கைமாற்றுகைக்காக பகிரங்க நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கும்;

(ஒ) இச்சட்டத்தின் கீழ் எந்தக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தக் கருமங்கள் எல்லாம் தொடர்பில் விதிகளை ஆக்குவதற்கும்; அத்துடன்

(ஓ) பொதுவாக, பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அல்லது அதனை எய்துவதற்கு அவசியமானதாக இருக்கின்றதான அல்லது இடைநேர்விளைவாக அல்லது உகந்ததாக இருக்கின்றதான அத்தகைய எல்லாச் செயல்களையும் மற்றும் கருமங்களையும் செய்து கொள்வதற்கும்.

பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத் திற்கான நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தல்

**23.** (1) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர், பாராளுமன்ற உறுப்பினர்களின் கலந்தாலோசனையுடன் 15 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மதியுரைக்குழு மற்றும் பாராளுமன்ற பணியாட்டொகுதியினரின் எவரேனும் இயைபான அலுவலர்கள் ஒவ்வொரு நிதியாண்டுக்கும் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்துக்கான நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தல் வேண்டும்.

(2) நடவடிக்கைத் திட்டமானது பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) நிதி ஆண்டுக்கான பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் முன்னுரிமைகள்; அத்துடன்

(ஆ) அத்தகைய நிதி ஆண்டின்போது அத்தகைய முன்னுரிமைகளை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கான நடைமுறை நெறி.

(3) ஒவ்வொரு நிதி ஆண்டுக்குமான நடவடிக்கைத் திட்டமானது ஏற்புடையற்பாலதாக இருக்கக்கூடியதான வரவுசெலவுத்திட்ட அழைப்பு சுற்றறிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்கு ஏற்ப பொருந்தக்கூடிய வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும்:

இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக “வரவுசெலவுத்திட்ட அழைப்பு சுற்றறிக்கை” என்பது வரவுசெலவுத்திட்டதை தயாரிக்கும் நோக்கத்துக்காக இயைபான நிதிசார் ஆண்டுக்கான பகிரங்க நிறுவனத்தின் அரசிறை மற்றும் செலவின சமர்ப்பிப்பினைத் தேவைப்படுத்தி தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஒரு சுற்றறிக்கை எனப் பொருள்படும்;

(4) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்திற்கான முதலாவது நடவடிக்கைத் திட்டமானது பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரின் நியமனத் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

தத்துவங்களின் கையளிப்பு

**24.** (1) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் ஆனவர் பிரதி பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலருக்கு அல்லது பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு, இச்சட்டத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்கள் மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணியினை எழுத்தில் கையளிக்கலாம். அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர் பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலரின் பணிப்புக்கும் மற்றும் கட்டுப்பாட்டுக்கும் அமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை மற்றும் பணியைப் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(2) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எப்படியிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவத்தையும், கடமையையும், பணியையும் தனிப்பட்ட ரீதியாக பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அல்லது புரியலாம் என்பதுடன் அவ்வாறு செய்வதில் ஏதேனும் நேரத்தில் அத்தகைய ஏதேனும் கையளிப்பை இல்லாதொழிக்கலாம்.

**25**. பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலர் அவரால் பணிக்கப்பட்டவாறு தகவலை செயல்முறைப்படுத்த வேண்டிய வரான ஆளொருவராக இருப்பதற்கு பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களிடையே இருந்து தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை பெயர் குறித்து நியமிக்கலாம். *தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை பெயர் குறித்து நியமித்தல்*

பாகம் IV

## பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் சுயாதீனத் தன்மையும் வகைகூறவேண்டிய தன்மையும்

**26**. (1) ஆளெவரும், பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலர், பிரதி பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலர், அல்லது பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர், 15 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மதியுரைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது 29 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் குழுவின் ஓர் உறுப்பினர் அல்லது பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்துக்கு ஏதேனும் சேவையை வழங்குகின்ற எவரேனுமாள், அவர்களின் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் அவர்களின்மீது செல்வாக்கை செலுத்துதல் ஆகாது என்பதுடன் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் நடவடிக்கைகளில் தலையிடுதலுமாகாது. *பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலரின் சுயாதீனத் தன்மை*

(2) பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலர்:-

(அ) புறவயமாக, வெளிப்படையாக மற்றும் பக்கச்சார்பற்ற முறையில் அவரது தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும் புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஏதேனும் பகிரங்க நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையையும் மற்றும் இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுகின்றவாறான அத்தகைய வேறு வேண்டு

கோள்கள், கண்டுபிடிப்புகள் மற்றும் கொள்கைக் கிரயவியல் என்பவற்றை பொதுமக்களுக்கு வெளிப்படுத்துதல் வேண்டும்.

பாராளுமன்றத்திற்கு வகைகூற வேண்டியமை

**27.** (1) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் பாராளுமன்றத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்தின் தொழிற்பாடு பற்றிப் பாராளுமன்றத்திற்கு தகவலை வழங்குதல் வேண்டும்.

(2) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்தின் தொழிற்பாடு மற்றும் நிருவாகம் பற்றிய ஆண்டறிக்கையைத் தயாரித்தல் வேண்டும்; அதன் நிதியாண்டு தொடங்குவதிலிருந்து நான்கு மாதங்களினுள் அது, பகிரங்க நிதி மீதான குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) பகிரங்க நிதிமீதான குழுவானது–

(அ) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தினது ஆண்டறிக்கையை மீளாய்வு செய்தல் வேண்டும்;

(ஆ) இருபத்திமூன்றாம் பிரிவின்கீழ் பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலரினால் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு செலவினம் பற்றிய வரைவு மதிப்பீட்டின் நியாயத் தன்மையை மதிப்பிடுதல் வேண்டும்;

(இ) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் குறிக்கோள்கள் தொடர்பாக அதனது தொழிற்பாட்டையும் வளங்களை அளித்தலையும் கவனத்திற்கொள்ளல் வேண்டும்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின்கீழ் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகம் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அதன் இயலுமாந்தன்மைமீது தாக்கம்கொண்டுள்ள பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் தொழிற்பாட்டுடன் தொடர்புபட்ட ஏதேனும் கருமம் பற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

பாராளுமன்ற வரவு செலவுத் திட்டத்தின் சுயாதீன மீளாய்வு

**28.** (1) தேர்தல் முடிவுற்ற பின்னர், பகிரங்க நிதி மீதான குழு பாராளுமன்றத்தினால் அமைத்துருவாக்கப்படுகின்றதிலிருந்து பதினான்கு நாட்களினுள் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் தொழிற்பாடுகளின் சுயாதீனமான மீளாய்வை ஆரம்பிப்பதற்கு அத்தகைய குழு பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலருக்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான ஒரு வேண்டுகோளானது பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) மீளாய்வை நடாத்துவதற்கு விரும்பப்பட்ட ஆள் அல்லது குழு;

(ஆ) மீளாய்வின் நோக்கெல்லை;

(இ) மீளாய்வு நடாத்தப்படவேண்டிய வழி; அத்துடன்

(ஈ) பகிரங்க நிதி மீதான குழுவிற்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய மீளாய்வு பற்றிய அறிக்கையில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள்.

(3) சுயாதீன மீளாய்வானது பகிரங்க நிதிமீதான குழுவினால் அத்தகைய மீளாய்வுக்கான வேண்டுகோள் தேதியிலிருந்து ஒன்பது மாதங்களினுள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(4) பகிரங்க நிதிமீதான குழுவானது அத்தகைய அறிக்கையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் செயல்முறைக்கு உகந்தவரை விரைவாக அத்தகைய அறிக்கையை பாராளுமன்றத்தில் இடப்படச் செய்வித்தல் வேண்டும்.

(5) கடந்த ஐந்து வருடங்களினுள் பகிரங்க நிதிமீதான குழுவினால் சுயாதீன மீளாய்வு ஒன்று வேண்டப்படாதிருப்பின், பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகத்தின் செயல்நிறைவேற்றுகையின் புறவாரியான அல்லது கூர்மையான மீளாய்வை சுயாதீனமாக நடாத்துவதற்கு (வேறு நியாயாதிக்கங்களினுள் உள்ள ஒத்த நிறுவனங்கள் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்புகள் உட்பட) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே எவரேனும் ஆளை வேண்டுதல் வேண்டும்.

பாகம் V

## நுனித்தாராய்வு மற்றும் வெளிப்படையானதன்மையை வசதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள்

பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகத்தின் பகுப்பாய்வுசார் பணிகள்

**29.** (1) பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகமானது குழுக்களிலிருந்தான மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்தான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியிடமிருந்தான மற்றும் சுயேட்சைக் குழுவிடமிருந்தான வேண்டுகோள்மீது பின்வரும் பகுப்பாய்வுசார் பணிகளை புரிதல் வேண்டுமென்பதுடன் அதன் ஒழுங்குமுறையாக வெளியிடப்பட்ட பகுப்பாய்வுகளின் பாகமாக அவை அமைதலும் வேண்டும்:-

(அ) நீண்டகால நிதிசார் நிலைபெறுதகு தன்மையின் பகுப்பாய்வுகள், தனிசு நிலைபெறுதகுதன்மை, நிதிசார் விதிகள் மற்றும் இலக்குகளுக்கு இணங்கியொழுகுதல் மற்றும் தந்திரோபாய குறிக்கோள்களுக்கு எதிரான வரவுசெலவுத்திட்டமிடுதல் வழிமுறைகளை கண்காணித்தல் உட்பட பொருளாதார மற்றும் நிதிசார் எதிர்வுகூறல்கள் மற்றும் திட்டமதிப்பீடுகள்;

(ஆ) அரசாங்கம் பாராளுமன்றத்தில் இடுகின்ற வருடாந்த மற்றும் குறைநிரப்பு வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின் பொதுவான பகுப்பாய்வு;

(இ) குழுக்களிடமிருந்தான மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்தான வேண்டுகோள்களுக்கு பதிலிறுப்பதில் குறிப்பிட்ட வரவு செலவுத் திட்ட பகுப்பாய்வு;

(ஈ) அரசாங்கத்தினால் இடப்படும் அல்லது பாராளுமன்றத்தினால் தயாரிக்கப்படும் சட்டவாக்க மற்றும் கிரயவியல் பகுப்பாய்வு அத்துடன் கொள்கை முன்மொழிவுகள்;

(உ) பாராளுமன்ற கலைப்பு மற்றும் தேர்தலுக்கான இட்டுச் செல்கையைப் பின்பற்றி அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி

அல்லது சுயேட்சைக்குழு ஒன்றின் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்ட கொள்கைகள் பற்றிய கிரயவியல்கள் மற்றும் முன்மொழிவுகள்; அத்துடன்

(ஊ) பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலரின் தற்றுணிபில் எடுக்கப்பட்டதும், பாராளுமன்றத்தின் பகிரங்க நிதிப் பொறுப்புக்களின் செயல்நிறைவேற்றுகைக்கு நன்மையளிக்கும் என உட்கருதப்பட்டதுமான பொதுவான பகுப்பாய்வுசார் கற்கைநெறிகள்.

(2) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகம் பின்வருவன உட்பட (1) ஆம் உட்பிரிவில் உருவரை செய்யப்பட்ட பகுப்பாய்வுசார் பணிகளை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்படவேண்டிய அணுகுமுறையை தீர்மானிப்பதில் முறையியல்ரீதியிலான சுயாதீனத்தைப் பிரயோகித்தல் வேண்டும்:-

(அ) 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட மிகவும் அண்மித்த பொருளாதார எதிர்வுகூறல் எல்லைகள் மற்றும் நிதிசார் மதிப்பீடுகளின்மீது பெறுதல்;

(ஆ) முன்மொழிவுகளின் அடிப்படைப் பகுப்பாய்வின் உண்மைத்தன்மையை பரீட்சிக்க மாற்று சமவாயங்கள், கருதுகோள்கள், எதிர்வுகூறல்கள் மற்றும் மதிப்பீடுகளைக் கடைப்பிடித்தல்;

(இ) பகுப்பாய்வுசார் பணிகளை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தக்கூடியனவான சுயாதீன தரவுத்தொகுதிகள் மற்றும் மாதிரிகளைக் கடைப்பிடித்தல்; அல்லது

(ஈ) பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட பகுப்பாய்வின் வலிமையை பரீட்சிக்க பகுப்பாய்விற்கான அல்லது கூர்மையான மீளாய்வுக் குழாம்களில் வெவ்வேறு அணுகுமுறைகளை வடிவமைக்க உதவுவதற்கு ஏதேனும் குழுவைத் தாபித்தல்.

தகவலுக்கான அணுகுகை

**30.** (1) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் 29 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பகுப்பாய்வுசார் பணிகளை நடாத்துவதற்கு பயன்படுத்துவது பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்துக்குத் தேவையாகவுள்ள பகிரங்க நிறுவனங்களில் வைத்திருக்கப்படும் தனிப்பட்ட மற்றும் உணர்வுபூர்வமான தகவலை பாதுகாப்பது தொடர்பாக தோதான இடர்காப்புகளை இடுதல் வேண்டும்.

(2) இலங்கையின் தேசிய பந்தோபஸ்து தொடர்பான எந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டால் அது தேசிய பந்தோபஸ்துக்குப் பங்கம் விளைவிக்கின்றதோ அந்தத் தகவல், 29 ஆம் பிரிவினைப் பின்பற்றி நடாத்தப்பட்ட பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகத்தின் பணிசார் பகுப்பாய்விற்கு முக்கியமானதாக இருக்கின்றதாவென்பதைத் தீர்மானிப்பதற்கு தகவலை வைத்திருக்கின்றதான திணைக்களத்திற்கு, முகவராண்மைக்கு அல்லது ஒழுங்கமைப்பிற்கு பொறுப்புடையவரான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலரினால் தனிப்பட்ட ரீதியில் பரிசோதனை செய்யப்படுதல் வேண்டும்.

(3) தேசிய பந்தோபஸ்துடன் தொடர்புபட்ட தகவல்கள் பற்றிய விதிவிலக்குடன், பகிரங்க நிறுவனமானது பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரினால் தேவைப்படுத்தக்கூடிய வாறான அத்தகைய முறையிலும் அத்தகைய தேதியன்றும் சொல்லப்பட்ட தகவலைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(4) பகிரங்க நிறுவனமொன்று, பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் தகவலை காண்பிப்பதற்கு அது இயலாததாக இருக்கக்கூடுமென மதிப்பிடுகின்றவிடத்து, பகிரங்க நிறுவனமானது தகவலை முன்வைப்பதற்கான ஒரு மாற்றுத்தேதியை பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலருக்கு எழுத்தில் முன்மொழியலாம். முன்வைப்பதற்கான தேதியை மாற்றுவதா என்ற தற்றுணிபு பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலரின் மீதாதல் வேண்டும்.

(5) ஏதேனும் பகிரங்க நிறுவனம் அத்தகைய தகவலை வேண்டுகோளில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது மீளாய்வு செய்யப்பட்ட தேதியில் கொடுத்துதவுவதற்கு தவறுமிடத்து, பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலர் (383 ஆம் அத்தியாய மான) பாராளுமன்ற (தத்துவங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டத்திற்கு இணங்க அத்தகைய பகிரங்க நிறுவனத்திற்கு தகவலுக்கான வேண்டுகோளை மீண்டும் வழங்குவதற்கு சபாநாயக ருக்கு வேண்டுகோள்விடுக்கலாம்.

(6) பகிரங்க நிறுவனம் ஒன்றின் ஒவ்வோர் அலுவலரும் மற்றும் ஊழியரும் இப்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய இணங்கியொழுகுகையானது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின், ஒழுங்குவிதியின், உடன்படிக்கையின் அல்லது பகிரங்க நிறுவனத்தினால் வைத்திருக் கப்பட்டு முகாமைசெய்யப்பட்ட இரகசியம், அந்தரங்கத்தன்மை அல்லது தகவல் பற்றிய வெளிப்படுத்தாமை தொடர்பான நடவடிக்கைமுறையின் மீறுகை ஒன்றாக கருதப்படுதலுமாகாது.

**31.** (1) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் இச்சட்டத் தின் ஏற்பாடுகளுக்கு அமைய, (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக் கப்பட்ட தகவல்கள் இலத்திரனியல் அல்லது எண்ணிம வழிவகைகள் மூலமும் வர்த்தமானியில் வெளியிடப்படுவதன் மூலமும் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பொதுமக்களிற்கு கிடைக்கக் கூடியதாக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். வெளிப்படை யான தன்மை

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல் பின் வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படுவதற்கு, வழங்கப்படுவதற்கு அல்லது வெளியிடப்படுவதற்கு தேவைப்படுத்தப்படு கின்றதான ஏதேனும் விதியை, நெறியை அல்லது வழிகாட்டுநெறியையும்;

(ஆ) வருடாந்த வரவுசெலவுத்திட்டமிடல் செயல்முறையுடன் இணைந்த வழமையான அறிக்கைகளின் முன்மொழியப் பட்ட வெளியீட்டுத் தேதிகளையும்;

(இ) முப்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கு அமைய அடிப்படைத் தரவுகளின் முழுமையான விபரம், கருதுகோள்கள் மற்றும் பகுப்பாய்வின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் முறையியல் உட்பட வழமையான பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலக அறிக்கைகளையும் மற்றும் பகுப்பாய்வையும்;

(ஈ) முப்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கு அமைய அடிப்படைத் தரவுகளின் முழுமையான விபரம், கருதுகோள்கள் மற்றும் பகுப்பாய்வின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் முறையியல் உட்பட குழு ஒன்றிடமிருந்தான அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்தான குறித்த வேண்டுகோள் ஒன்றிற்கான பதிலளிக்கையில் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளையும் பகுப்பாய்வுகளையும்;

(உ) பயன்படுத்தப்பட்ட தரவுகளின் முழுவிபரம், கருதுகோள்கள் மற்றும் முறையியல் ஆகியன உட்பட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சை குழுக்களின் விஞ்ஞாபனங்களின் கிரயவியல் பகுப்பாய்வையும்;

(ஊ) பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலத்தின் வருடாந்த அறிக்கையையும்; அத்துடன்

(எ) பிரிவு 23 இன் கீழ் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு நிதியாண்டுக்குமான பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் நடவடிக்கைத் திட்டத்தையும்.

*2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்புடைமை*

**32.** இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டின் 12 இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டமானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்கள் தொடர்பில் ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

பாகம் VI

## பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தின் உதவியைப் பெறுவதற்கான நடவடிக்கைமுறை

பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்திலிருந்து தேவைப்படுத்துகின்ற பகுப்பாய்வுக்காக வேண்டுகோள் விடுப்பதற்கான வழிகாட்டு நெறிகள்

**33.** (1) பிரிவு 29 இல் குறித்துரைக்கப்பட்டவாறு பகுப்பாய்வு ஒன்றைத் தயாரிப்பதற்கு ஏதேனும் குழு, பாராளுமன்ற உறுப்பினர், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேட்சைக்குழு பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகத்துக்கு வேண்டுகோள்விடுக்கலாம்.

(2) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டுகின்ற விதிகளை ஆக்குதலும் வழிகாட்டு நெறிகளை வழங்குதலும் வேண்டும்:-

(அ) குழுக்களும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பகுப்பாய்வு ஒன்றை நடாத்துவதற்கு பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்துக்கு சம்பிரதாயமுறையில் வேண்டுகோள் விடுப்பதற்கான செயல்முறை;

(ஆ) அத்தகைய எழுத்திலான வேண்டுகோள்களுக்கான படிவங்கள்;

(இ) எழுத்திலான வேண்டுகோளில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்;

(ஈ) ஓர் எழுத்திலான வேண்டுகோளை சமர்ப்பிக்கும் முறை; அத்துடன்

(உ) வேண்டுகோள்களுக்கு முன்னுரிமையளிக்க பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகம் பயன்படுத்தும் முறையியல்.

(3) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் பின்வருவன வற்றை எடுத்துக்காட்டுகின்ற விதிகளை ஆக்குதலும் வழிகாட்டு நெறிகளை வழங்குதலும் வேண்டும்:-

(அ) பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவர், பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்குமுன்னர் அதனது விஞ்ஞாபனத்தின் கிரயவியல் பகுப்பாய்வை நடாத்துவதற்கு பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்துக்கு சம்பிரதாயமுறையில் வேண்டுகோள்விடுப்பதற்கான செயல்முறை;

(ஆ) தேர்தலொன்றில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவர், பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரும் வாக்கெடுப்புத் தேதிக்குமுன்னரும் அதனது விஞ்ஞாபனத்தின் கிரயவியல் பகுப்பாய்வை நடாத்துவதற்கு பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகத்துக்கு சம்பிரதாயமுறையில் வேண்டுகோள்விடுப்பதற்கான செயல்முறை;

(இ) அத்தகைய எழுத்திலான வேண்டுகோள்களுக்கான படிவம்;

(ஈ) எழுத்திலான வேண்டுகோளில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்;

(உ) ஓர் எழுத்திலான வேண்டுகோளை சமர்ப்பிக்கும் முறை; அத்துடன்

(ஊ) வேண்டுகோள்களுக்கு முன்னுரிமையளிக்க பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகம் பயன்படுத்தப்பட வேண்டிய முறையியல்.

(4) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட விதிகள் மற்றும் வழிகாட்டுநெறிகளை இச்சட்டம் நடைமுறைக்கு வருவதிலிருந்து ஆறு மாதங்களுள் வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும் என்பதுடன் சர்வதேச மிகச்சிறந்த செயல்முறைக்கு இணங்க ஒழுங்குமுறையாக அவற்றை மீளாய்வு செய்து நாளதுவரையாக்குதலும் வேண்டும்.

*ஓர் அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழுவிலிருந்து கொள்கை கிரயவியலை தயாரிப்ப தற்கான வேண்டுகோள்*

**34.** (1) பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றதான ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவர் பாராளுமன்றக் கலைப்புக்கு முன்னர் முன்மொழிவின் விஞ்ஞாபனத்தில் கொள்கை கிரயவியல் ஒன்றை தயாரிப்பதற்கு பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்திற்கு வேண்டுகோள் ஒன்றை விடுக்கலாம்.

(2) பாராளுமன்றக் கலைப்பைத் தொடர்ந்து தேர்தலில் போட்டியிடுகின்ற ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலரினால் ஆக்கப்பட்ட விதிகளுக்கு இணங்க, அதனது விஞ்ஞாபனத்தில் வெளியிடப்பட்ட முன்மொழிவொன்றின் கொள்கை கிரயவியலொன்றை தயாரிப்பதற்கு பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்திற்கு வேண்டுகோள் ஒன்றை விடுககலாம்.

(3) ஒரு வேண்டுகோளைப் பெற்றுக்கொண்டதன்மேல், பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் கொள்கை கிரயவியலை நடாத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வேண்டுகோளையும் கொள்கை கிரயவியலையும் செயல் முறைக்குகந்தவரை விரைவாக பொதுமக்களிற்கு வெளியிடுதலும் வேண்டும்.

(4) உட்பிரிவு (1) அல்லது (2) இன்கீழ் செய்யப்பட்ட வேண்டுகோள் ஒன்றிற்குப் பதிலளிக்கையில் நடாத்தப்பட்ட கொள்கை கிரயவியல் ஒன்றை பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் பகிரங்கமாக வெளியிடமுடியாதவிடத்து, வாக்கெடுப்புத் தேதிக்கு முன்னர் அதற்கான காரணங்களை குறித்தளித்து பொதுமக்களிற்கு ஒரு கூற்றை அவர் வெளியிடுதல் வேண்டும்.

(5) உப்பிரிவு (4) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கூற்று, வாக்கெடுப்புத் தேதியைத் தொடர்ந்து செயல்முறைக்கு உகந்தவரை விரைவாக பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலரினால் வெளியிடப் படுதல் வேண்டும்.

உதவி வழங்குவதற்கு இயலாமைக்கான காரணங்கள்

**35.** (1) பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் அல்லது வாக்கெடுப்புத் தேதிக்கு முன்னர் 33 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வேண்டுகோளின்மீது கொள்கை ஒன்றின் அல்லது முன்மொழியப்பட்ட கொள்கை ஒன்றின் கிரயவியல் ஒன்றைத் தயாரிப்பதற்கு பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் இயலாதவராக இருக்குமிடத்து, அத்தகைய வேண்டுகோள், பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் –

(அ) அவசியமான தகவலை பெற்றுக்கொள்ளாதிருப்பின்; அல்லது

(ஆ) கொள்கையின் அல்லது முன்மொழியப்பட்ட கொள்கையின் அத்தகைய கிரயவியலைத் தயாரிப்பதற்கு போதுமான நேரம் அவருக்கு இருக்கவில்லையாயின்,

பாராளுமன்றக் கலைப்பிலிருந்து அல்லது அத்தகைய வாக்கெடுப்புத் தேதியிலிருந்து பயனுறும்வகையில் மீளப்பெறப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) முப்பத்திமூன்றாம் பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட வேண்டுகோள் ஒன்று, அத்தகைய வேண்டுகோளை விடுத்த 33 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட தலைவரால், எழுத்தில் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலருக்கு முகவரி யிட்டனுப்பப்பட்டு எந்நேரத்திலும் மீளப்பெறப்படலாம்.

தேர்தல் பொறுப்புக்கள் பற்றி தேர்தலுக்கு பிந்திய அறிக்கை

**36.** (1) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் விஞ்ஞாபனங் களினால் செய்யப்பட்ட மற்றும் அவற்றில் உள்ளடக்கப்பட்ட தேர்தல் முன்மொழிவுகளின் நிதிசார் மற்றும் நிதித்தாக்கம் பற்றிய தேர்தலுக்குப் பிந்திய அறிக்கை ஒன்றை தயாரித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலர் தேர்தலிற்கு முன்னர் தயாரித்து வெளியிட்டுள்ளதான கிரயவியல் வேண்டுகோள்களிற்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

## பாகம் VII

## நிதி

பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் செலவினம் பற்றிய வரைவு மதிப்பீடு

**37.** (1) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் அடுத்து வரும் நிதியாண்டின் வரவு செலவுத்திட்டத்துக்குப் பதினான்கு நாட்களுக்கு முன்னர் அத்தகைய நிதியாண்டிற்கான பகிரங்க நிதிமீதான குழுவிடம் செலவினம் பற்றிய வரவு மதிப்பீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) பகிரங்க நிதிமீதான குழுவானது, நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில், செலவினத்தின் வரைவு மதிப்பீட்டின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நிதியாண்டின் வரவுசெலவுத் திட்டத்திற்குப் பதினான்கு நாட்களுக்கு முன்னர் வரவுசெலவுத்திட்ட அலுவலருக்கும் பாராளுமன்றத்திற்கும் அறிக்கையிடுதலும் வேண்டும்.

(3) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர் அத்தகைய நிதியாண்டின் வரவுசெலவுத்திட்டத்துக்குப் பதினான்கு நாட்களுக்கு முன்னர் வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்காக நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருக்கு செலவினத்தின் வரைவு மதிப்பீட்டை அனுப்புதல் வேண்டும்.

பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகத்தின் நிதியம்

**38.** (1) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகமானது அதனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப் படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்; அத்துடன்

(ஆ) எத்தன்மையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகள், கொடைகள் மற்றும் மானியக்கொடைகள் என்றவகையாக பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்:

ஆயின், பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலர், பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தினால் பெறப்பட்ட அல்லது அதற்கு அளிக்கப்பட்ட எல்லா நன்கொடைகளும், கொடைகளும், மானியக்கொடைகளும் தொடர்பில், வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(3) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தினால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரினால், பிரதி பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரினால் மற்றும் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் அலுவலர்களினால் மற்றும் ஊழியர்களினால் தமது தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை நிறைவேற்றுவதில், புரிவதில் மற்றும் பிரயோகிப்பதில் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படும் அத்தகைய பணத்தொகைகள் யாவும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்கு தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய பணத் தொகைகள் யாவும்.

வரவுசெலவுத் திட்ட அலுவலகம் கணக்குகளை பேணுதல்

**39.** பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகம் அது தோதானதென கருதக்கூடியவாறு ஏதேனும் வங்கியில் ஏதேனும் கணக்கை திறக்கலாம் அத்துடன் பேணலாம் என்பதுடன் அத்தகைய கணக்கு, பகிரங்க கூட்டுத்தாபனங்களின் நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலவுகின்ற நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க தொழிற்படுத்தப்படுதலும் வேண்டும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

**40.** (1) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வேறு எல்லா நிதிக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களைப் பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகம் வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் நிதிச் செயல்நிறைவேற்றத்தினதும் நிதி நிலைமையினதும் உண்மையானதும் நியாயமானதுமான நோக்கை முன்வைக்கும் நோக்கத்திற்காக, பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகம் 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் அல்லது அமுலிலுள்ள எழுத்திலான வேறு ஏதேனும் கூட்டத்தினைால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க அதனது கணக்குகளைத் தயாரித்தல் வேண்டும்.

(4) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட கணக்குகளின் கணக்காய்விற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VIII

### பொது

**41.** (1) பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர், பிரதி பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் மற்றும் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் இச்சட்டத்தின்கீழான அவர்களின் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளை பிரயோகிக்கும்போது, புரியும்போது அல்லது நிறைவேற்றும்போது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்கு அல்லது செய்யப்பட்ட ஏதேனும் விட்டுவிடுகைக்கு ஆளாதல் ஆகாது.

நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்களுக்கான விடுபாட்டுரிமை

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட அத்தகைய விடுபாட்டுரிமை பின்வருவனவற்றுக்கு நீடித்தலாகாது:-

(அ) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான குற்றவியல் தவறு ஒன்றுக்கான பொறுப்புக்கும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் ஏற்புடையற்படற்பாலதான எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளை மீறிச் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்கும்.

**42.** பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகமானது (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

வரவுசெலவுத் திட்ட அலுவலகம் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாகக் கருதப்படுதல்

**43.** பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர், பிரதி பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர் மற்றும் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலக ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கத்திற்காகவும் பகிரங்க சேவையாளர்களாக கருதப்படுதல் வேண்டும்.

பகிரங்க சேவையாளர்கள்

**துடர்ச்சி அல்லது குற்ற வழக்கிலான செலவுகள் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலக நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல்**

**44.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தினால் அல்லது அதற்கெதிராக கொண்டுவரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதனால் உறப்பட்ட எல்லா செலவுகளும் பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சி அல்லது குற்றவழக்கில் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட செலவுதொகைகள் மட்டும் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) பாராளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலரினால், பிரதி பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலரினால் அல்லது பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தின் எவரேனும் அலுவலரினால் அல்லது ஊழியரினால், இச்சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்படுவதாக கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளுக்கு எதிராக கொண்டு வரப்படும் ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலொழிய, பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலக நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**விதிகள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப் படுதல்**

**45.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலர், இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகார மளிக்கப்படுகின்ற அல்லது தேவைப்படுத்தப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் மூன்று மாதங்களுக்குப்பிந்தாமல் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வொரு விதியும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னரே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதிபற்றிய அறிவிப்பு ஒன்று வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்

**46**. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய–

''வரவுசெலவுத்திட்டம்'' என்பது, இயைபான நிதிசார் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தை உள்ளடக்குதல் வேண்டும்;

''குழு'' என்பது, ஏதேனும் பாராளுமன்றக் குழு எனப் பொருள்படும்;

"பகிரங்க நிதிமீதான குழு" என்பது, நிலையியற் கட்டளைகளின் நியதிகளின்படி பாராளுமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பகிரங்க நிதிமீதான குழு எனப் பொருள்படும்;

"அரசியலமைப்புப் பேரவை" என்பது, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41அ என்னும் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட அரசியலமைப்புப் பேரவை எனப் பொருள்படும்;

"கிரயவியல்" என்பது, 4 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கொள்கை முன்மொழிவு ஒன்றின் அல்லது பாராளுமன்றத்தில் இடப்பட்ட சட்டமூலத்தின் செலவு மதிப்பீடு எனப் பொருள்படும்; அது நடைமுறைப் படுத்தப்பட்டால், வரவுசெலவுத்திட்ட மிகையை அல்லது பற்றாக்குறையை மாற்றும் அல்லது ஏலவேயுள்ள சட்டங்கள் தொடர்பாக நாட்டின் வளங்களுக்கு மிகவும் பொருத்த மானதாக இருக்கும் ஆனால் –

(அ) இது, கொள்கை ஒன்றின் திறமைகளினது மதிப்பீடொன்றாகவிராது என்பதுடன் கொள்கை விதப்புரைகளை வழங்குவதில்லை;

(ஆ) இது வரவுசெலவுத்திட்டத்தின் மீதான தாக்கம் தவிர, கொள்கை ஒன்றின் அல்லது சட்டமூலம் ஒன்றின் எவையேனும் பொருளாதார தாக்கங்களை மதிப்பிடவில்லை; அத்துடன்

(இ) இது, கொள்கை ஒன்றின் நிதிசாராத் தாக்கங்களை மதிப்பிடவில்லை;

அத்துடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்:-

(i) முன்மொழிவுகளின் ஒட்டுமொத்த செலவுதொகையின் மதிப்பீட்டையும்;

(ii) கொள்கை கிரயவியலைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட முறையியலின் விவரணத்தையும்; அத்துடன்

(iii) பகுப்பாய்வுக்காகப் பயன்படுத்தப்படும் உள்ளீடுகளையும்;

“தேர்தல்” என்பது, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழான தேர்தல் எனப் பொருள்படும்;

“சுயேட்சைக் குழு” என்பது, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் உறுப்பினருடன் வேறு வகையில் இணைந்திராத அல்லது அதன் உறுப்பினரொருவராகவிராத, பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் அல்லது தேர்தலொன்றிலான வேட்பாளர்கள் என்போரை உள்ளடக்கியதான தொகுதி எனப் பொருள்படும்;

"தகவல்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) பகிரங்க நிறுவனத்தின் உடைமையிலுள்ள நிதி, வர்த்தக, தனியாள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத் தரவுகளையும்;

(ஆ) நிதி மாதிரிகளையும் கிரயவியல் மாதிரிகளையும்; அத்துடன்

(இ) குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திலிருந்தான தரவுகள் போன்ற நிதிசாரா தரவுகளையும் மற்றும் பாராளுமன்றத்தில் இடப்பட்ட கொள்கை ஒன்றை அல்லது சட்டமூலத்தை வடிவமைத்து, நடைமுறைப்படுத்துவதற்கு எந்த சட்டமதியுரையின்மீது அரசாங்கம் நம்புகின்றதோ அந்த சட்டமதியுரையையும்;

"விஞ்ஞாபனம்" என்பது, தேர்தலுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றினால் அல்லது சுயேட்சைக் குழு ஒன்றினால் வழங்கப்பட்ட வெளியீடு ஒன்று எனப் பொருள்படும் என்பதுடன் ஒரு தேர்தல் மேடையில் செய்யப்பட்ட எவையேனும் பொறுப்பேற்றல்களையும் உள்ளடக்கலாம்;

"பகிரங்க கூட்டுத்தாபனம்" என்பது, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பகிரங்க நிறுவனம்" என்பது, 1987 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, அரசாங்கத்திற்குச் சொந்தமாக தொழில் பொறுப்புமுயற்சிகளை பகிரங்க

கூட்டுத்தாபனங்களாக மாற்றுதல் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான ஏதேனும் அமைச்சு, அரசாங்கத் திணைக்களம், பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூர் அதிகாரசபை மற்றும் தொழில் அல்லது வேறு பொறுப்புமுயற்சி, அல்லது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எந்தக் கம்பெனியில் அரசாங்கம், ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை பங்குகளின் ஐம்பது சதவீதத் திற்கு மேற்பட்டதை வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பெனி அத்துடன் ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சு அல்லது திணைக்களம் அல்லது ஒரு மாகாணசபை யினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப் பட்ட ஏதேனும் அதிகாரசபை எனப் பொருள் படும்;

“பகிரங்க வளங்கள்” என்பது, பணம், நிதிகள், காணி, கட்டிடங்கள், வசதிகள், சாதனம், வழங்கல்கள் மற்றும் வாகனங்கள் உட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் ஏதேனும் பகிரங்க நிறுவனத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட ஏதேனும் ஆதனம் அல்லது சொத்து எனப் பொருள்படும்; அத்துடன்

“அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி” என்பது, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பில் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித் தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத் தல் வேண்டும்.

**47**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்